உ
சிவமயம்



யாழ். வட்டுக்கோட்டை, சங்கரத்தையைத்
தாயகமாகக் கொண்டவரும் தற்பொழுது
மூளாயில் வசித்தவருமாகிய
அமரர்


## சபாபதிப்பிள்ளை கந்தையா,
## சொர்ணலிங்கம் அவர்களின்

சிவபதப் பேற்றினைக் குறித்து
வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

## சபாபதிப்பிள்ளை கந்தையா

## சொர்ணலிங்கம் H. Q. I.

அவர்கள்

மலர்வு: **16–12–1926** உதிர்வு: **22–11–1982**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தரவேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கியிருந் தருள்செய் பாதிரிப்புலியூர்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்
[ணனே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப்பரந்த வெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேனார்க் கெடுத்துரைக்கேன்
ஆண்ட நீயருளிலையானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள் புரியாயே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கேயுலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோருணர்வே
தெளிவளர் பளிங்கின்றிரண் மணிக்குன்றே
சித்தத்துட்டித் திக்குந்தேனே
அளிவளருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
    பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன்
    மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்குமந்தணர் வாழ்கின்ற சிற்றம்
    பலமேயிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
    பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

ஊர் எல்லாம் கூடி ஒக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேர் இட்டுச்
சூரையந் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே
ஆர்த் தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்த பின்
வேர்த்தலை போக்கி விறகிட்டெரிமூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீறியிலோரே.

## திருப்புராணம்

அருவமு முருவுமாகி யனாதியாய்ப் பலவாயொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகத்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங்கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்குதித்தன னுலகமுய்ய.

## பட்டினத்தார் பாடல்.

பிறக்கும் பொழுது கொடு வந்த தில்லைப் பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடு போவ தில்லையிடை நடுவில்
குறிக்குமிச் செல்வஞ் சிவன் தந்த தென்று கொடுக்கறியா
திறக்குந் குலாமருங் கென் சொல்லு வேள்கச்சியேகம்பனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரபத்திரர்

அக்குமணி மிக்கசெக் கர்ச்சடையுமுக்கண்ணு
மாயிரங் கமல முகமும்
அணிமணிக் குண்டலங் குழைகளுங்
குலமலேயி னழகொழுகு கனகபுயமும்
தொக்குயர் படைக்கலக் கைகளும்
மார்பிற் றுலங்கு செம்பொன் னாரமும்
சுருதியுங் கருதரிய பரிபுர பதங்களுந்
தோன்ற வந்தெனை யாளுவாய்
தக்கனெடு மக்கள்மரு மக்கள் பக்கத்தி
லுறை சதுர்முகன் முதல் வானவர்
தங்கள்கரு வங்க ளதிபங் கம்படச்
சிவன் தலைமை நிலையிட்ட முதல்வா
திக்குலவு சோலையுஞ் சாலையும் பாவிற்
செறிந்தபிட் டிப்பதியில் வாழ்
சித்திர வலங்கார பத்ரகா ளிக்கன்பு
திகழ்வீர பத்ர குருவே.

## பத்திரகாளி

திருமருவு பரமசங் கரகிருபா கரவாத
திரிபுராந் தகபக வனைத்
திடமனத் துடனன்று வடவனத்
தினினின்று சேர்ந்து வாதாடி யோடி
உருமருவு மண்டலமொ டண்டர்பயில்
எண்டிசைகள் உயரண்ட ரண்ட முழுதும்
உன்னிபொழு கோரிமா வீரிசடை
யன்பாரி உயரி றீங்காரி சூரி
மருமருவு சடிலதர காளிகங் காளிசர்
வாணிமா தங்கி சூலி
மதமகிட சங்காரி வீரசிங் காரிநெடு
வாரிசூழ் பாரினிலவும்
தருமருவு பிட்டிநகர் உறையுமொரு
கவுரியே தயவுவைத் தெனையாளு வாய்
சத்தியுத் தமிசித்ர மெத்துவித் தகிநித்ய
சத்திபத்திரகா ளியே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஏறுமயி லேறி விளையாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் ணணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியாரெல்லாம்.

★

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பத்திரகாளியம்மன் துணை

இனிவுடனும் கனிவுடனும் எம் மத்தியில்
வாழ்ந்து வந்த அன்பன்

## திரு. சா. க. சொர்ணலிங்கம் அவர்கள்

**22-11-1982** இல் எம் அனைவரையும்
துக்க சாகரத்தில் ஆழ்த்திவிட்டு சிவபதம் அடைந்தவரின்

# வாழ்க்கை வரலாறு.

★

திருவாளர் சொர்ணலிங்கம், திரு. சபாபதிப்பிள்ளை கந்தையா வுக்கும், திருமதி கந்தையா சின்னத்தங்கம் அவர்களுக்கும் ஏக புத்திரனாக மலேசியாவில் 16-12-1926 இல் இப்பூவுலகில் பூர்வ புண்ணியத்தால் ஜனனமானார். அன்னாரின் தாயார் சின்னத்தங்கம் இவர் பிறந்த பின் ஓர் சிலதினங்களுள் சிவபதம் அடைந்தார் இவரின் தந்தை ஆற்றோணாத் துயரத்தால் அருந்தவப் புதல்வனை பராபரிக்கும் எண்ணத்தால் யாழ்நகர் - சங்கரத்தைக்கு வந்து மறுமணம் செய்தார்.

எல்லாம் வல்ல இறைவி அருளால் மகவை பற்பல பாடசாலைகளுக்கு அனுப்பிப் பல கலைகளையும் கற்க வைத்து ஈற்றில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்றனர். அங்கு 1-3 48 இல் அரசின் S. S. C. பரீட்சையில் நல்ல தேர்ச்சி பெற்றார். அதிபர் உப அதிபர், வகுப்பு ஆசிரியர் ஆகியோரின் நற்சாட்சிப் பத்திரங்களை பெற்றுள்ளார். மேலும் பாராளுமன்ற உறுப்பினர் திரு கனகரத்தினம், கிராமசபைத் தலைவர் திரு. A. T. வேதாபரணம் அவர்களிடமும், தபால் அதிபர் அவர்களிடமும் நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றுள்ளார்.

அதன்பின் ஓர் சில மாதங்கள் பாடசாலை ஆசிரியராகவும், பின் பிரிட்டிஸ் இராணுவத்திலும் கடமை புரிந்துள்ளார். பின்னர் கூட்டுறவே மக்களுக்கு உகந்த சேவை என்று எண்ணி 9-1-1950 இல் சேவையில் தெரிவுசெய்யப்பட்டார். அரசாங்க உதவியுடன் கண்டியில் பொல்கொல்லையில் கூட்டுறவு பயிற்சி கலாசாலையில் பயிற்சி பெற்று நற்சான்றுகளுடன் நவம்பர் 1951 இல் வெளியேறினர்.

இவரின் அதிகாரிகள் இவரை மட்டக்களப்பு, திருக்கோவில் களவாஞ்சிக்குடி போன்ற இடங்களுக்கு சேவையில் ஈடுபடுத்தினர். அதிக ஊக்கத்துடனும் அயராது உழைத்ததாலும் இவரைக் கண்டிக்கு இவரின் மேலதிகாரிகள் கடமைக்கு ஈடுபடுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கும் பலரும் வியக்கும்படியும் ஊக்கமாய் கடமையில் ஈடு பட்டு Motor Cycle B. S. A. இன் உதவியுடன் வெகுதுரிதமாக மலை நாடுகளில் சேவை செய்துள்ளார். இக்காலத்தில் தனது உறவினர் ஒருவருடன் தங்கியிருந்தார்.

இவர் தன் வாழ்க்கையில் வாழ்க்கைத் துணைவியை அடைய எண்ணி யாழ்நகர் சடுதியாக வந்தார். வந்தவர் தனது சொந்த மைத்துனியாகிய திரு. மார்க்கண்டுவின் மகள் இரத்தினேஸ்வரியை 19-5-55 இல் பல பெரியாரின் ஆசிகளுடன் மணம் முடித்தார். கடமையுணர்ச்சி மிக உடைய இவர், அதிவிரைவில் தன் பாரியாருடனும், தன் தந்தையுடனும் கண்டிக்குத் திரும்பினர். அங்கு தன் உறவினருடன் சில மாதங்கள் வாழ்ந்து, தனிக் குடித்தனம் விரும்பி தனது உறவினருக்குச் சிரமம் கொடுக்க விரும்பாது அவரின் உதவியுடன் தனிக் குடித்தனம் நடத்தும் காலம், உத்தமி யாம் உஷா எனும் புதல்விக்கு அகமகிழ்ந்து தந்தையானர், பூர்வ புண்ணிய பலனல் தனது இரண்டாவது மகளாம் வனஜா எனும் உத்தம புத்திரியையும், அதன்பின் ஆண் மகவு லிங்கேஸ்வரனையும் அக மகிழ்ந்தும் அடுத்ததாக அருமைப் புதல்வன் நகுலேஸ்வரனையும் ஆசையுடன் பெற்றுள்ளார். ஐந்தாவதாக அருமையாய் அனுஷியாவை பெற்றுள்ளார்.

கண்டியில் கடமையில் ஈடுபட்ட காலத்தில் பலராலும் உயர் அதிகாரிகளினலும் போற்றப்பட்டு பலர் நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துள்ளார்கள். அவற்றுள் ஓர் சில, Gate Mudaliyar திரு கனகநாயகம் J. P. உம் அத்துடன் திரு H. B. உடராவண J. P. யும் ஜனவரி 1960 இல் பெற்றுள்ளார். இவர் அன்றும் என்றும் தனது உற்றூர் உறவினருக்கும், சிநேகிதருக்கும் மனமுவந்து விருந்தோம்பலில் தனிரகமுடையவர். அதன்பின் கண்டியில் இருந்து மாற்றம் பெற்று யாழ்நகர் வந்து வவுனியா, பண்டத்தரிப்பு, மன்னர், காரைநகர், சங்கானை போன்ற மாவட்டங்களில் சேவை புரிந்துள்ளார்.

கூட்டுறவு மருத்துவமனை மூளாயிலும், இயக்குநர் சபை உறுப்பினராக 1979ம் ஆண்டில் சேவை செய்தார். இவர் கூட்டுறவு அரசாங்கம் சார்ந்த தமிழ் பாடத்தில் உயர்பெறுபேறுகளுடன் டிசெம்பர் 1956 இல் சித்தியடைந்துள்ளார். மேலும் மார்ச் மாதம் 1957 இல் Grade-II பரீட்சையில் சித்தியடைந்து அதன் பின்னர், ஒக்டோபர் 1969 இல் Grade-I பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். 16-1-1979 இல் விசேஷ சித்தியும், 1981 இல் Head Quarters பரிசோதகராகவும் சித்தியடைந்து கடமையாற்றியுள்ளார்.

எல்லாம் வல்ல இறைவன், இவர் உயர்ச்சி அடைந்த பின்னர் ஆறுக் கொடு நோயையும், அடிக்கடி சுகவீனங்களையும் கொடுத்து ஆற்றெணுக் கொடு நோயை சகிக்கமுடியாது மாரகம மருத்துவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையில் இரண்டரை மாதங்களுக்குமேல் தொடர்ந்து சிகிச்சைபெற் பெற்றும், சத்திர சிகிச்சை மூலம் குணமடைந்தும், சத்திர சிகிச்சையின் 7ம் நாள் அவரின் மனைவியும் மகனும் அருகில் இருக்கையில் 22-11-82 இரவு 10-35 மணியளவில் சிவபதமடைந்தார். சென்ற மூன்று வருடங்களாக இவர் பெரிய புராணம், மகாபாரதம், ராமாயணம் போன்ற காவியங்களை மிக ஆர்வமுடன் மிக விரிவாகக் கற்றுள்ளார்.

எல்லோர்க்கும் நல்லவராய், நீதிக்கும் நியாயத்துக்கும் போராடி சமாதானத்தையும் விரும்பிய இவர், எம் மத்தியில் இல்லையே, இவரை 1983ம் ஆண்டும் சேவையாற்ற அரசாங்கம் நீடித்த சேவை கொடுத்துளது. என் செய்வோம், நாம் அவரை இழந்து விட்டோம் பராபரமே.

**அன்னாரின் ஆன்மா சாந்தியடைய**
**இறைவனை பிரார்த்திப்போமாக.**

---

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

## எஸ். ஞானப்பிரகாசம் அவர்கள் வழங்கிய அனுதாபச் செய்தி

பிறப்பது மிறப்பதும் பெயருஞ் செய்கையும்
மறப்பது நினைப்பதும் வடிவம் யாவையுந்
துறப்பது மின்மையுஞ் சூழ் கலாச்
சிறப்புடை யரனடி சென்னி சேர்த்துவாய்

கந்தபுராணம்.

இறப்பு தவிர்க்க முடியாதது. ஆனால் இளவயதில் இறைவன் அவரைத் தன்னிடம் அழைத்துக் கொண்டது கொடுமை. இறைவன் தனக்குப் பிரியமானவர்களையே விரைவில் அழைத்துக் கொள்வான்.

'வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'

என்னும் பாடலுக்கு இலக்கணமாகிவிட்டார்.

திரு. எஸ். கே. சொர்ணலிங்கம் தனது சேவைக் காலத்தில் தனக்களிக்கப்பட் கடமைகளை புத்திசாதுரியத்துடன் திறம்படச் செய்து முடித்து உயர் அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்றவர். அவர் ஆற்றிய சேவை நினைவு கூரத்தக்கது.

அவர் மறைவால் வாடும் மனைவி மக்கள், உற்றார் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறேன்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்க்கட்சி முதல்வரும்
காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினருமாகிய

# மாண்புமிகு அ. அமிர்தலிங்கம் அவர்கள்

வழங்கிய

# இரங்கலுரை

★

வட்டுக்கோட்டை, சங்கரத்தையைச் சேர்ந்த தலைமைக்காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் திரு. கந்தையா சொர்ணலிங்கம் அவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்தமை அவருடன் பழகிய எம்போன்றோருக்கும், அன்னாரின் உற்றார் உறவினர்களுக்கும். அவர் தொழிலாற்றிய கூட்டுறவுத் துறைக்கும் ஓர் பேரிழப்பென்றே கூறவேண்டும்.

1926ம் ஆண்டில் சிங்கப்பூரில் பிறந்த அவர் தனது கல்வியை இலங்கையில் தொடர்ந்து படித்து 1950-ம் ஆண்டில் கூட்டுறவுத் துறையில் தொழில் புரியத் தொடங்கினர். கடந்த 32 வருடங்களாக அவர் தனது தொழிலை மிகவும் சிறப்பாகவும், மேலதிகாரிகள் மெச்சக்கூடிய விதத்தில் திறமையாகவும் ஆற்றிவந்தார். அவர் முக்கியமாக தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களாகிய மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் தனது சேவையை அளித்துள்ளார். பல சமூகநலன்களில் அக்கறைகொண்ட அவர் 1980 – 1981ம் ஆண்டுகளில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் இயக்குநர் சபை உறுப்பினராகவும் கடமையாற்றினர்.

அவர் சமுதாயத்திற்கும், நண்பர்களுக்கும் நல்லதைச் செய்தாரேயன்றி தனக்கென எதையும் செய்தாரிலர். தனக்கோ தன் குடும்பத்துக்கோ அவர் எதையாவது தேடிவைக்க வேண்டும் என்று விரும்பினருமிலர். அன்பாலும், பண்பாலும், தன் இனிய பேச்சாலும் சகலரது அன்பையும் தேடினரேயன்றி வேறெதையும் தேடவில்லை. இப்படிப்பட்ட நல்லவரின் பிரிவு எம் சமுதாயத்திற்கே ஒரு பேரிழப்பாகும்.

அவரது பிரிவுத் துயரினுல் கலங்கி நிற்கும் அன்னாரின் அன்புத் துணைவியும் அருமைச் செல்வங்களும், உற்றார் உறவினர்களும் ஆறுதல்பெற ஆண்டவனை இறைஞ்சி அன்னாரின் ஆத்ம சாந்திக்கு எமது அஞ்சலிகளைச் செலுத்துவோமாக.

அ. அமிர்தலிங்கம்
எதிர்க்கட்சி முதல்வர்

10-12-1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ பத்திரகாளி அம்மன் துணை

# அமரர் சா. க. சொர்ணலிங்கம் அவர்கள்
## இறைவன் திருவடி நிலை
## அடைந்தமை குறித்து பாடிய
# இரங்கற் பாக்கள்

★

ஆனைமுகனை ஐங்கரனை அடிபணிந்து வேண்டுகின்றேன்
பானை வயிற்றோனைக் கைகூப்பிக் குட்டிக் கும்பிட்டேன்
வாணியே வந்தெந்தன் நாவில் உதிக்காயோ நல்வீணையளோ
காணி நடுவே நடமாடும் பத்துக் கரமுடைய பராசக்தியே
ஆறாத் துன்பத்தால் ஆழ்ந்துள்ளோம் அன்னையே அனைவருமே
மாறாத் துயரத்தால் மறைந்தவரோ உன் அன்பன் உன் அடியான்
மாசற்ற தங்கம்அவர் சபாபதிக்குப் பிள்ளையாம் அவர்தந்தை
[கந்தையா
பாசமுள்ள ஏகபுத்திரனாய் எய்தினான் இப்பூவுலகில் அன்னையே
மலேசியாவில் பாசமுள்ள அன்னையையும் பிரிந்தனனே சிலநாளில்
மாலேதான் உன்உடலைப் பசும்பாலில் வளர்த்தாரோ
ஆயிரமும் தொளாயிரமும் ஈர்பத்தும் ஆறும் வருடமோ
[ஆங்கிலத்தில்
தையிரியமாய் மார்கழியில் பதினாறில் உதித்தனையே அன்ப
ஆறாத்துயரத்தால் உன்னுடனே அங்கிருந்து தாய்நகர்க்கும் வந்
மாறாக் கவலையினால் மறுமணமும் செய்திட்டார் உமக்காக [தாரே
ஏகபுத்திரனை நலிவுடனே எப்படியும் காப்பாற்ற
வேகமாய் வளர்த்தனையே வெவ்வேறு கலைகளையும் விரிவாக
மாசறக் கற்றனையே மகிழ்வுடனே மானிப்பாய் இந்துக் கல்லூரி
[தனிலே
வாழ்த்தினர், சான்றிதழ்கள் எத்தனையோ சகலருமே தந்தனரே
வாழ்நாளை வளம்பெறவே பிட்டிஅன்னை அடிபணிந்தாய்
ஆசானாய் கற்பித்தாய் திரமாய் சேனையிலும் சேவை செய்தாய்
அவையாவும் அகற்றிவிட்டுக் கூட்டுறவு நற்றென்றாய்
அவைக்கே சிறந்ததென்று ஐம்பதிலே பதிவானாய்
கண்டிக்கும் சென்றாய் பயிற்சிலும் மேலானாய்
பட்டப் பதவியுடன் மட்டக் களப்பினிலே மதிப்புடனே
திட்டமுடன் திருக்கோவில் களுவாஞ்சிக் குடிதனிலும்
கண்டிப்பாய் கடமை செய்தாய் மலைநாடு நன்றென்று
கண்டிக்கு வருகைதந்து கடமையிலே மேலானாய்
மலைநாட்டில் மலைஏற ஒற்றை சுவடியுமே உதவாது
தலைசிறந்த B. S. A. மோட்டார் சைக்கிளிலே நகரெல்லாம்
சென்றனையே நல்லபெயர் கொண்டனையே பத்திரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றனையே சான்றிதழ்கள் மதியுடனும் வாழ்ந்தாயே
இல்லறமே நல்லறமாம் எனநினைந்து இனிவுடனே
தொல்லையின்றி நல்மாமன் மார்க்கண்டு கன்னியாம்
மைத்துனியை காதல்திரு மணமாய் கனிவுடனே கைபிடித்தாய்
வைத்தனையே திருமணமும் 19-5-1955இல் சடுதியாய் நடந்ததுவே
பங்கமிலா வாழ்க்கைப் படகினிலே வளம் பெற்றாய்
மங்களமாய்ப் பெரியோர்கள் ஆசியுடன் மணம் முடித்தாய்
தன்கடமை பெரிதென்று தாரமும் தன்தந்தை தொடர்ந்திடவே
தன்நலம் கருதாத மைத்துனரின் அகமதிலே சிலதினங்கள்
[களிந்தனரே

பின்தனி விடுதிதான் தேடி இனிவாக வாழ்ந்தனையே
வந்தவரை வரவேற்று வளமாக உபசரித்தாய் வாஞ்சையுடன்
என்னவரும் கடமையிலே பல்வேறு சான்றுகளும் மதிப்புற்ற
மாமேதைகள் மகிழ்ச்சியுடன் தந்துகந்தனரே சரியாக
சிலதிங்கள் கடந்திடவே சீராக பெண் மகவை
பலராலும் போற்றிடும் உத்தமியாம் உஷா உதிக்க
மலைநாட்டுச் சேவை மதிப்புடனே செய்த பின்னர்
தலைஅகமாம் யாழ்நகரில் தன்இனத்தார் மத்தியிலே
பங்கமிலா சங்கரத்தைதனில் பதிப்பிடமாய் வாழ்ந்தாயே
வாழ்க்கையிலே வருவதெல்லாம் அன்னைசெயல் என்றாய்
அடுத்துதித்தாள் வனஜாவும் அருந்தவத்தால் அதன்பின்னே
அடுத்துதித்தான் ஆசைக்கு ஆண்மகவாம் விங்கேஸ்வரனுமே
அன்புடையான் அருந் தவத்தால் நகுலேஸ் வரனும்தான்
இன்புடனே வாழ்க்கையிலே இன்புற்றிருக் கையிலே
ஐந்தாக அனுசியாவை அருந்தவத்தால் பெற்றனையே
இத்தனைக்குள் கலைகளிலும் தேர்வுற்றாய் திடமாக
அத்தனை பதவிகளில் மேலோங்கி சித்திபெற்று
ஈற்றினிலே H. Q. எனும் பட்டமுமே அடைந்து
யாழ்நகரில் சேவையுடன் வவுனியாவும் மன்னாரும்
நெடுங்கேணி காரைநகர் பண்டத்தரிப்பு சங்கானை
போன்ற பலநோக்கு கூட்டுறவில் பலராலும்
போற்றிடவே பணிபுரிந்தாய் பகைமை இன்றி
நல்வாழ்வு வாழுதற்கு நற்பசிசோ நோயும் தான்
போற்றுவார் போற்றுக்கு ஆற்றொணா கொடுநோயா
நீதியுடன் வாழ்ந்தற்கு நீங்காத கொடு நோயா
பாதியுடன் பறந்துவிட்டாய் பாவியர் நாம் என்செய்வோம்
ஆறாத் துயரமப்பா தீராத கவலையப்பா அங்கு
மாறுமனையினிலோ மருத்துவ மனையிலே சுகமடைந்த
உம்மை மாரந்தான் ஏன்வந்தான் மதிஇழந்து கவர்ந்தானோ
நம்மை விட்டகன்றாயே நாம்செய்த கொடுவினையோ
பதிஇழந்த பாவிபடும் துயரம் எத்தனைதான் பொட்டும்
பூவும் பாதியிலே இழந்தனளே பாசமுள்ள பிள்ளைகளும்
பதறி அழுதிடவே ஓடிமறைந்து விட்டாய் நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதறி அழுகின்கின்றோம் மனமுடைந்தோம் மதிஇழந்தோம்
சதிசெய்தான் எமனுமே சற்றுப் பொறுத்தானு அந்தோ
பாசமுள்ள பிள்ளைகளின் படும்துயரை யார் அறிவார்?
நேசமுடன் வளர்த்தாய் நற்சாட்சிகளைப் பார்க்கலையே
அன்புள்ள மைத்துனரும் ஆறுக் கவலையால் ஆழ்ந்துளரே
தன்நினைவின்றித் தங்கைமுகம் பார்த்து தவிக்கின்றனரே
இன்முகமில்லாத இடியுண்ட இளையோரும் எல்லோரும்
ஏற்றிப் புகழ்ந்திட்ட எல்லோரும் கண்ணீரால் தோய்கின்ருர்
மாற்று மருந்தில்லை மன்மதனைத் தேற்றுதற்கு
சோகத்தால் சோர்ந்துளரே பாசத்தால் பதறுகின்ருர்
உற்ருரும் உறவினரும் உறுதுணையாய் நின்றவரும்
நற்பண்புடை யோரும்விடும் கண்ணீர் ஆருய் பெருகுதுவே,
நீதிக்கும் நேர்மைக்கும் உண்மைக்கும் உதவிக்கும்
சாதித்தாய் வாதிட்டாய் வலுவுடனே என்றுமே
அன்று அத்தான் எனஅழைத்த அன்புமொழி எங்கே
இன்றுநீ எங்கே உன் திட்டங்கள் தான் எங்கே
உனை என்றுமே மறக்க முடியாதே அன்பனே
நினைத்தாலோ கண்ணில் நீர்பெருகும் நின்வாழ்வு
கனவுதான் வாழ்க்கை என்ருல் நினைவற்றுப் போமோ
மனமுடைந்தோம் மதிஇழந்தோம் துயரத்தால்
அன்னையின் அடிசேர்ந்தாய் அவனியிலே உமக்கென்ன
தன்னை மறந்தாய் தாய்தாழ் தஞ்சமெனப் பறந்தாயே.

மைத்துனர்;
சி. செ. தம்பையா

* * *

## மனைவி புலம்பல்

அன்னையே, தாயே ஆயிரம் கண்ணுடையாளே
நின் அருளால் என் பதியையும் என்னையும்
இனிவுடன் வாழ வைத்தாயே கனிவுடன், ஐவரை
நனிவுடன் ஈய்ந்து நயமுடன் நல்வாழ்வு தந்தாயே
பதியை இழந்தேன் பாவிஎன் செய்வேன் பாதியிலே
சதியன்றோ என் பொட்டும் பூவும் அழிந்ததுவே அந்தோ
ஓர்இரு மகவின் திருமணம் ஏனும் களிப்புடன் சபிபதியாய்
சீருடன் சிறப்புடன் காணுதுகட்டிய கோட்டை சரிந்தனவே
நோயுற்ருய் நொடியில் பறந்துவிட்டீரே பாசப்பதியே
சேய்களின் சிறப்புக்களை சிரிப்புடன் பார்கலையே அந்தோ
வாயால் கூறவும் மனதால் எண்ணவும் மாழ்குறேன் மயங்குறேன்
இதுதான் வாழ்வா என்பதியை இழந்தேன் இனிஎன் செய்வேன் என்
கதிதான் என்ன பத்துக் கரமுடைய பிட்டிய பதியாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் புலம்பல்

தவத்தால் எம்மை மகவாய் பெற்றீர் ஐவருமானோம்
சிவத்தின் அருளால் சிறப்புடன் செல்லமாய்ச் சீராய்
கலைகள் யாவும் கருணையாய் கனிவுடன் தந்தீர்
மலைபோல் சரிந்தனை மயங்குகின்றோம் தயங்குகின்றோம்
விருப்பினுக்கேற்ப அருமருந்தாய் எமை அன்புடன் வளர்த்தீர்
கருகிய உள்ளம் மெழுகாய் உருகுது மெய்மறந்தே
பாதியில் பறந்தீர் பதைக்கின்றோமே கொள்ளியும் குடமுமாய்
வீதில் போகவும் விதிசெய்த சதியா? அந்திய காலம்
நாங்கள் நம்மைமாறு செய்யக் காத்திருந்தோமே
தாங்கள் சடுதியாய் மறைந்தெமை பதைக்க விட்டீரே
அன்பு அப்பா என்று அழைக்க யார்தான் வருவார்
இன்புடன் இனிநாம் எப்படி வாழ்வோம்.

✶

*யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்*

## வே. நடராசா அவர்கள் வழங்கிய இரங்கலுரை

அமரர் திரு. எஸ். கே. சொர்ணலிங்கம் கூட்டுறவுப் பரிசோதகராக 9-1-1950ல் நியமனம்பெற்று சென்ற 32 ஆண்டுகளாக தமது உத்தியோகக் கடமைகளை, கூட்டுறவாளர் தனிமதிப்பையும், மேலதிகாரிகளின் பாராட்டையும்; அன்பையும் பெறக்கூடிய முறையில் தமது உத்தியோகக் கடமைகளை நன்றே புரிந்துள்ளார்.

சென்ற இரு ஆண்டுகளாக வலிமேற்குப்பகுதி அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் பின் காரியாலயப் பரிசோதகராகவும் கடமைபுரியும் காலத்தில் அவரது நற்பண்புகளை அவதானிக்க முடிந்தது கடமையுணர்ச்சியும், எல்லோரையும் வசீகரிக்கக்கூடிய குணாதிசயங்களும், ஏற்ற பொறுப்பை திறம்பட நிறைவேற்றக் கூடிய வல்லமையும் உதாரண குணமும் படைத்த அன்னாரின் சடுதியான பிரிவு எல்லோரையும் துன்பத்துக்குள் ஆழ்த்தியது. அவரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு எனது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, இறைவன் அவர்களுக்கு ஆறுதலளித்து அருளவேண்டுமென வேண்டுகின்றேன்

அமரர் திரு. எஸ். கே. சொர்ணலிங்கம் அவர்களின் ஆன்மா சாந்தியடையவும் நற்கதிபெறவும் பிரார்த்தனை செய்வோமாக.

✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபச் செய்தி

எங்கள் அன்புக்கும் மதிப்பிற்குமுரிய அன்பர் திரு. எஸ். கே. சொர்ணலிங்கம் அவர்களின் பூதவுடல் மறைந்தாலும் அன்னாரின் சேவை நலனும், பண்பும் எங்களிடத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும். அன்னாரின் பிரிவால் வாடும் அன்பு மனைவிக்கும், பிள்ளைகளுக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மசாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

**காரைநகர் ப. நோ. கூ. சங்க ஊழியர்களும்**
**தலைவர், நெறியாளர் குழு அங்கத்தவர்களும்**

## அமரர் திரு. எஸ் கே. சொர்ணலிங்கம் அவர்கள்

1981ஆம் ஆண்டு வரை சங்கரத்தைக் குளத்தடி மைதானத்திலும், சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையிலும், குளத்தின் இருபுறங்களிலும் உள்ள மாதர் முன்னேற்றச் சங்கக் கட்டிடம், கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டிடம் என்பவற்றிலும் தாம் பங்கெடுக்காத பொது நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்து வந்த திரு. சொர்ணலிங்கம் அவர்கள் இன்று எம்மிடையே இல்லை. அவர் வசித்துவந்த வீடு மாதர் முன்னேற்றச் சங்கக் கட்டிடத்திற்கு அருகாமையில் அமைந்திருந்தமையால் அவரதும், அவர்தம் குடும்பத்தினதும் ஒத்துழைப்பு இன்றி எந்தப் பொது நிகழ்ச்சியும் அங்கே நடைபெறவில்லையென்றே கூறவேண்டும்.

அவர் முற்போக்கான எண்ணங்களை கொண்டிருந்த சிறந்த சிந்தனையாளன் என்பதை அவருடன் அளவளாவிய சந்தர்ப்பங்களில் என்னால் உணரக் கூடியதாக இருந்தது.

இத்தகைய ஒரு சிறந்த சமூக சேவையாளனை, சிந்தையாளனை வெகு சீக்கிரத்தில் இழக்க வேண்டி ஏற்பட்டது எமது துர்ப்பாக்கியமே. அன்னாரை இழந்து துயருறும் அவர்தம் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அவரது ஆத்மா சாந்தியடையப் இறைவனை பிரார்த்திப்போமாக.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

அன்பன்
**இரா முருகானந்தன்**
(இந்து வாலிபர் சங்கச் செயலாளர்)

17-12-1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாளர் சபாபதிப்பிள்ளை கந்தையா சொர்ணலிங்கம் அவர்களின் திடீர் மறைவைக் குறித்து,

கூட்டுறவு இலாகாவில் காரியாலயப் பரிசோதகராக இருந்து ஓய்வுபெற்ற மூளாய்,

## திரு. முத்துக்குமாரு கணபதிப்பிள்ளை

அவர்கள் கூறிய

## அனுதாபச் செய்தி

திருவாளர் சபாபதிப்பிள்ளை கந்தையாவுக்கும், தம்பிப்பிள்ளை சின்னத்தங்கத்துக்கும் அரிய புத்திரனாக திரு. சொர்ணலிங்கம் 1926ம் ஆண்டு மார்கழி மாதம் பதினாறும் திகதி (16) திகதி அவதரித்தார். அவர் இள வயதில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று வரும் காலத்தில் கல்வியில் சிறப்புற்று விளங்கியதோடு, விளையாட்டுத் துறையிலும் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டு ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் பாராட்டைப் பெற்றூர்.

கூட்டுறவு இலாகாவில் 9-1-1950 இல் உப பரிசோதகராக தமது தொழிலை ஆரம்பித்த இவர், தமது கல்வித் திறமை மூலம் பரீட்சையில் சித்தியடைந்து கூட்டுறவு சங்கப் பரிசோதகர் நியமனம்பெற்று ஈற்றில் தலைமைக் காரியாலயப் பரிசோதகராகவும் பதவியுயர்வு பெற்றிருந்தார்

இவர் கடமை செய்யும் காலங்களில் தமக்குரிய கடமைகளை திறம்பட ஆற்றிவந்தும், சேவை செய்த சங்கங்களில் சங்கத்தவர்களுடன் அன்பாக நெருங்கிப் பழகியும், சங்கங்களின் தரங்களை கீழ் நோக்கிப் போகாமல் பாதுகாத்தும், தமது சேவையை திறம்பட ஆற்றியமையால் கூட்டுறவு இலாகா அதிகாரிகளினுல் நன்மதிப்புப் பெற்றதோடு, சங்க அங்கத்தவர்களின் பாராட்டுக்களையும் பெற்று விளங்கினுர்.

இவர் கடமைபுரிய ஆரம்பித்த காலம் தொடக்கம் என்னுடன் பல இடங்களில் ஒன்றாகக் கடமையாற்றும் சந்தர்ப்பம் ஏற்பட்டமையால் நண்பராகப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது.

இவர் 19-5-1955 இல் மார்க்கண்டு இரத்தினேஸ்வரியை அன்பு மனைவியாக திருமணம் புரிந்துள்ளார் இவர்கட்கு இரு ஆண் பிள்ளைகளும், மூன்று பெண் பிள்ளைகளும் உளர். பிள்ளைகளில் எவராகிலும் தொழில் முயற்சி ஏற்பட முன்னர் இவர் திடீர் மறைவு மனைவி மக்களை ஆறுத் துயரத்தில் ஆழ்த்திவிட்டது.

பிறப்பு, இறப்பு எல்லாம் ஆண்டவனின் செயல் என தெளிவுற்று அவரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திப் போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

★

22-11-1982 இல் அமரத்துவமடைந்த எமது
அன்புத் தெய்வம்
சபாபதிப்பிள்ளை கந்தையா
## சொர்ணலிங்கம்
அவர்களின்

ஈமக்கிரிகைகளின் போது நேரில் சமுகம்தந்து
எமது துயரத்தில் பங்குபற்றியவர்களுக்கும்
அனுதாபச் செய்தி அனுப்பிய வெளியூர், உள்ளூர்
அன்பர்களுக்கும், எமது நிறைவு மலருக்கு
இரங்கலுரைகள் அனுப்பிய பெருமக்களுக்கும்
மற்றும் இன்னோரன்ன உதவிகள் புரிந்த யாவருக்கும்
எமது இதயபூர்வமான நன்றியறிதலைத்
தெரிவிக்கின்றோம்.

வணக்கம்.

மனைவி, மக்கள்

மூளாய்
27-12-1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாச அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org